(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 94.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2016 ஆகஸ்ட் 25, வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

142/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் நிதியாண்டில் நட்டமடைந்த அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(ii) அந்த நிறுவனங்கள் அடைந்த நட்டம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் பிற அரச நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) நட்டத்தை ஈடுசெய்வதற்காக மேற்படி நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரி மூலம் வழங்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டத்துக்கான காரணங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்காரணங்கள் ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

558/ '16

2.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) கொழும்பு மாநகர சபையினால் பல வருடங்களாக கொழும்பு நகரத்தின் குப்பை கூளங்கள் மீதொட்டமுல்ல பிரதேசத்தில் கொட்டப்படுகின்றன என்பதையும்;

(ii) 02 ஏக்கர் பிரதேசத்தில் மாத்திரம் குப்பை கூளங்களைக் கொட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும் ஏறக்குறைய 12 ஏக்கர் பிரதேசத்தில் குப்பை கூளங்கள் கொட்டப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) இப் பிரச்சினையின் காரணமாக கொலொன்னாவ பிரதேச மக்கள் கல்வி, சுகாதார மற்றும் சுற்றாடல் ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாளொன்றுக்கு கொழும்பு நகரத்திலிருந்து மீதொட்டமுல்லைக்கு கொண்டுவரப்படுகின்ற குப்பை கூளங்களின் அளவு யாது;

(ii) குப்பை கூளங்களை அகற்றுவதற்காக கொழும்பு நகரசபையானது மீதொட்டமுல்லைக்கு பதிலாக வேறு மாற்று இடமொன்றைத் தெரிவுசெய்யுமா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது;

(iv) குப்பை கூளங்களை வேறு இடத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாயின், அதன் பின்னர் தற்போதுள்ள குப்பை கூளங்களை அகற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துமா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

594/ '16

3.

கௌரவ லக்கீ ஜயவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் சதொச மூலம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு யாது; இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாது;

(ii) மேற்படி அரிசியில் தற்போது விற்பனை செய்யப்பட்டுள்ள அளவு யாது; இதன் மூலம் சதொச அடைந்துள்ள இலாபம் யாது;

(iii) விற்பனை செய்ய இயலாதிருந்த அரிசியின் அளவு யாது; இதன் மூலம் சதொசவுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தகைய நட்டம் ஏற்படுவதற்கான காரணம், அரிசி இறக்குமதிக்கு முன்னர் உள்ளூர் சந்தை நிலமைகளைக் கருத்திற்கொண்டு செயற்படாமையாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், நட்டத்தை எதிர்நோக்கும் செயற்பாடுகளை வினைத்திறனான விதத்தில் மேற்கொள்வதற்கான உரிய முறையியலொன்றை தயாரிப்பாரா;

(iii) ஆமெனில், குறித்த முறையியல் யாது; இதனை நடைமுறைப்படுத்தும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

608/ '16

4.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இராணுவ அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலைகளுக்கு உத்தியோகத்தர்கள் அல்லாத இராணுவ அங்கத்தவர்களின் பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பாக கடந்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட கொள்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

618/ ‘16

5.

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கோக்கிலாய் பிரதேசத்தில், திரு திருஞானசம்பந்தர் மணிவண்ணதாசருக்குச் சொந்தமான காணியொன்றில் சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மக்கள் எதிர்ப்பு பலமாக எழுந்துள்ள சந்தர்ப்பத்தில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்படுகின்ற மேற்படி விகாரையின் நிர்மாணிப்புப் பணிகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

639/ ’16

6.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சட்டவிரோதமாய் பெற்றுக்கொண்ட அரச சொத்துக்களை சுவீகரித்தல் தொடர்பான சனாதிபதி செயலணியின் அங்கத்தவர்கள் யார் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த செயலணியின் தலைவர் யார் என்பதையும்.;

(ii) அது நிறுவப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(iii) அதன் அங்கத்தவர்கள் அல்லது உதவி உத்தியோகத்தர்கள் விஜயம் செய்துள்ள வெளிநாடுகள் யாவை என்பதையும்;

(iv) அங்கத்தவர்கள் அல்லது உதவி உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்காக 2016 மார்ச் மாதம் 31 ஆந் திகதியளவில் செலவான மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) செயலணியின் தீர்மானத்தின்படி 2016 மார்ச் 31 ஆந் திகதியளவில் திருப்பி சுவீகரிக்கப்பட்டுள்ள சட்டவிரோதமாக பெற்றிருந்த சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு என்பவதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

671/ ’16

7.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைகளின் எண்ணிக்கை மற்றும் தற்கொலை முயற்சிகளின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைகளின் எண்ணிக்கை மற்றும் தற்கொலை முயற்சிகளின் எண்ணிக்கை,

(i) ஆண், பெண் பால்நிலைக்கு ஏற்ப;

(ii) வயதுத் தொகுதிகளுக்கு ஏற்ப;

(iii) ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப;

வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகள் அதிகளவில் பதிவாகிய 25 பிரதேச செயலாளர் பிரிவுகளும் யாவை;

(ii) தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகள் குறித்து சரியான தரவுகள் மற்றும் தகவல்களை அறிக்கையிடும் அரச நிறுவனம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

707/ ' 16

8.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஷ்யாவின், இலங்கைத் தூதுவராக திரு. உதயங்க வீரதுங்க கடமையாற்றிய காலஎல்லை யாது என்பதையும்;

(ii) இவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணை களின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இவரை கைதுசெய்வதற்கு சர்வதேச பொலிசின் உதவி கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

725/ ' 16

9.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் ஹன்தெஸ்ஸ, க/அல்மனார் தேசிய பாடசாலைக்குரிய மூன்றுமாடிக் கட்டிடம் அமைந்துள்ள இடம் அண்மையில் மண் சரிவுக்குள்ளானதென்பதையும்;

(ii) இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரினால் ED/7/99/9/1/31 ஆம் இலக்க, 2015.12.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் விழிப்புணர்வூட்டப்பட்ட போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கடும்மழையுடன் கூடிய காலநிலையின்போது, மேற்படி பாடசாலைக் கட்டிடமும் அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசமும் ஆபத்தான நிலையில் உள்ளதால், மண் சரிவுக்குள்ளாகியுள்ள மண் குன்றுக்கு அருகாமையில் பாதுகாப்பு மதிலொன்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

521/ ' 16

10.

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1815 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்த நாட்டை ஆட்சி புரிந்த பிரித்தானியர்களால் சுதந்திர போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்த சில இலங்கைத் தலைவர்கள் இராஜ துரோகிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இற்றை வரை அத்தலைவர்களின் பெயர்கள் குறித்த பட்டியலிலிருந்து அகற்றப்படவில்லையென்பதையும்;

(iii) அது தொடர்பாக அரசாங்கத்தின் கவனம் இதுவரை செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பிரித்தானியர்களால் இராஜ துரோகிகளாகப் பெயரிட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இவர்களை இராஜதுரோகிகளாகப் பெயரிடுவதற்கு அவர்கள் வழங்கியுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தலைவர்களை இராஜ துரோகிகளின் பட்டியலிருந்து அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி தலைவர்களை தேசிய வீரர்களாகப் பெயரிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

637/ ‘ 16

11.

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் முன்னைய அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட “தொரின் தொரட்ட –“கமின் கமட்ட” (வீட்டுக்கு வீடு - கிராமத்துக்குக் கிராமம்) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி, குருவிட்ட பிரதேச சபையுடன் கிரிஎல்ல, ஹாதுகந்த சமுர்த்தி சங்கம் ஒரு உடன்படிக்கை செய்துள்ளதென்பதையும்; இவ்வுடன்படிக்கையின் படி ஹாதுகந்த குருந்துகொட்டுவ வீதியை அமைத்து கொங்ரீட் இடுவதற்காக ரூபா 3 இலட்சம் செலுத்துவதாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) உடன்படிக்கையின் படி இவ்வீதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இதுவரை இச்சங்கத்துக்கு 20% தொகை (ரூபா. 58,000/-) மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மீதித் தொகை இதுவரை செலுத்தப்படாமையால் இச்சங்கம் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஒப்பந்தத்தின் மீதித் தொகையை மேற்படி சங்கத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) இதற்கு மேலதிகமாக, பின்வரும் வீதிகளை கொங்ரீட் இடுவதற்காக;

பதுவல வீதியின் மேல் பகுதிக்கு - ரூபா 500,000/-

ஹாதுகந்த, பொல்கஹஹேன வீதிக்கு - ரூபா 300,000/-

ஹாதுகந்த, இலுக்பிட்டிய வீதிக்கு - ரூபா 300,000/-

ஹாதுகந்த, தகில்லவத்த வீதிக்கு - ரூபா 300,000/-

இச்சங்கத்துக்கு செலுத்த வேண்டியுள்ள தொகையை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

655/ '16

12.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் 2016 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலகட்டத்துக்குள் தமது கடமைகளுக்காக அல்லது தனிப்பட்ட பயனாளிகளுக்காக விமானப் படைக்குரிய ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்களைப் பயன்படுத்திய அரசியல்வாதிகள் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு நபர்கள் வெவ்வேறாக யாவர் என்பதையும்;

(ii) மேற்படி விமானப் பயணங்களுக்காக தலா ஒவ்வொரு நபரிடமிருந்து அறவிடப்பட்ட தொகை வெவ்வோறக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி விமானப் பயணங்களுக்காக அறவிடப்பட வேண்டிய பணத்தில் இதுவரை செலுத்தப்படாதுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

672/ '16

13.

கௌரவ பிமல் ரத்னாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சனாதிபதிகள் ஆகியோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள, கொழும்பு நகரில் அமைந்துள்ள மொத்த உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்களை தற்போது உபயோகிப்பவர்களின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்குவதற்காக பின்பற்றப்படும் ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை அல்லது ஆவணமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதனை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) ஒழுங்குவிதிகள் அடங்கிய ஆவணமொன்று இல்லாவிடின், உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கப்படும் நடைமுறை என்னவென்பதையும்;

(vi) உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது நடைமுறைக்கு அமைவாக தகைமைகளை பூர்த்தி செய்யாது இல்லங்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

708/ '16

14.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 மே மாதம் முதல் 2015 சனவரி மாதம் வரையான காலப்பகுதியினுள் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் வர்த்தக விளம்பரங்கள் வழங்கப்பட்ட ஊடக நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஊடக நிறுவனத்துக்கும் வர்த்தக விளம்பரங்கள் வழங்கப்பட்ட திகதி, விளம்பரத்தின் பெறுமதி ஆகியவற்றை ஒவ்வொரு ஊடக நிறுவனத்திற்கும் அமைய தனித்தனியே சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ கே. காதர் மஸ்தான்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"பேர்ட்டி திஸாநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (அத்தியாயம் 131) 39 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2016 யூன் 22 ஆந் திகதிய 1972/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை மூலம் சிங்கள மற்றும் தமிழ்மொழி பிரதிகளில் அச்சுப் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட, மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆவது அத்தியாயமான) 122 ஆம் பிரிவு மற்றும் VII அ பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்படும், குறித்த சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 02 ஆம் திகதிய 1939/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 4.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவீனத் தலைப்பு 147, நிகழ்ச்சித்திட்டம் 01,— † செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் பயன்பாட்டுக்காக இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரித்துள்ள செலவின எல்லைகளை விஞ்சாத வகையில் அதன் பலதரப்பட்ட செலவீன தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த சேமிப்புக்களை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் செலவீனத் தலைப்பு ''வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர நிலைமைகள் செயற்திட்டத்திற்கு'' மாற்றிக் கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வரவுசெலவுதிட்ட வகுத்திட்டுச் சட்டத்தின் 6.1 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இனங்காணப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்புடன் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி குறைநிரப்பு நிதி ஏற்பாடாக உரிய அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு ஏதேனுமொரு நிதியத்திலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினால் நிதியளிப்பு செய்யப்பட்ட ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் (ரூ. 592,925,000) தொகையினை விஞ்சாத தொகையொன்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்துள்ளார்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| தலைப்பு:- | 147 - பிரதேச அபிவிருத்தி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம்:- | 1 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| மீண்டெழும் செலவீனம் | - | ரூ. 469,425,000 |
| மூலதனச் செலவீனம் | - | ரூ. 123,500,000 |
| மொத்தச் செலவீனம் | - | ரூ. 592,925,000 |

(ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் மாத்திரம்)

**அரச அலுவலர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| | |
|---|---|
| உச்ச செலவீன எல்லை ( உச்ச வரவு எல்லை) | – ரூ 2,000,000 |
| குறைந்த கிடைப்பனவு எல்லை (குறைந்த செலவு எல்லை) | - ரூ. 150,000 |
| உச்ச வரவு நிலுவை எல்லை | - ரூ. 3,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 55,000,000

* 10.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:-

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 12.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 13.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.